மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி, சேலம்.

முன்னிலை: திரு. ஆர். ராதாகிருஷ்ணன், பி.எ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி.

2024-ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 27-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவராண்டு 2054, சோபகிருது வருடம், மாசி திங்கள் 15 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**இ.ம.எண்.3/2022 இன் அ.வ.எண்.75/2022**

சரஸ்வதி ... மனுதாரர் / வாதி

**/ எதிராக /**

அழகர்சாமி ... எதிர்மனுதாரர்/ 9 ம் பிரதிவாதி

இந்த மனுவானது 06.08.2022 ஆம் நாள் இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 27.02.2024 ஆம் தேதி இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர்கள் திரு. P. பரமசிவம் மற்றும் திரு. N.S. அண்ணாதுரை ஆகியோர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் அவர் ஆஜராகததால் அவரை தோன்றாத்தரப்பினராக பதிவு செய்தும், மனு, எதிருரை மற்றும் வழக்கு கோப்புகளை ஆராய்ந்தும், மனுதாரர் தரப்பு வாதங்களைக் கேட்டறிந்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்/வாதி இந்த மனுவை உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1 & 2 மற்றும் பிரிவு 151 ன் கீழ் அசல் வழக்கில் இறுதி தீர்ப்பு வரும் வரை வழக்கு சொத்துக்களை 9 ம் பிரதிவாதி எவ்வித வில்லங்க பாராதீனமும் செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2) **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

(i) மனுதாரருக்கு 1 ம் பிரதிவாதி சகோதரர் ஆவார். 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் 1 ஆம் பிரதிவாதியின் பிள்ளைகள் ஆவார்கள். 5 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் வழக்கு சொத்தை கிரையம் பெற்றவர்கள் ஆவார்கள். 10 முதல் 12 பிரதிவாதிகள் அரசு அலுவலர்கள் ஆவார்கள். மனுதாரரின் தந்தை மற்றும் அவருடைய சகோதரர்களான நல்லப்பன் மற்றும் ஆறுமுகம் ஆகியோர்கள் குடும்ப சொத்துக்களை கடந்த 27.04.2002 ஆம் தேதியில் ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். அந்த பாகப்பிரிவினை ஆவணப்படி

'B' அட்டவணை சொத்தானது மனுதாரரின் தகப்பனார் முத்துவுக்கு ஒதுக்கப்பட்டது. மேற்சொன்ன முத்துவுக்கு மனுதாரர் மற்றும் 1ஆம் பிரதிவாதி ஆகியோர்கள் பிள்ளைகள் ஆவார்கள். திருத்தப்பட்ட இந்து வாரிசுரிமை சட்டம் 39/2005 இன்படி 27.04.2022 ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை ஆவணப்படியான 'B' அட்டவணை சொத்தில் மனுதாரர் அவருடைய தந்தை மற்றும் சகோதரர் அருணாசலத்துடன் சேர்ந்து கூட்டு பங்குதாரர் ஆவார். ஆகையால் மனுதாரருக்கு அந்த சொத்தில் 3ல் 1 பங்கு பாக உரிமை உள்ளது. கடந்த 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மனுதாரரின் தகப்பனார் மற்றும் சகோதரர் ஆகியோர்கள் மனுதாரரின் சம்மதம் இல்லாமல் கூட்டு குடும்ப சொத்தை விற்பனை செய்ய முயற்சித்தார்கள். அதனால் மனுதாரர் 27.01.2006ஆம் தேதியில் கூட்டு குடும்ப சொத்துக்களில் தனக்குள்ள 3ல் 1 பங்கு உரிமையை அளிக்கக்கோரி சட்ட அறிவிப்பை அனுப்பினார். அதனை கடந்த 28.01.2006ஆம் தேதியில் பெற்றுக்கொண்ட மனுதாரரின் தந்தை மற்றும் சகோதரர் அதற்கு எந்த பதிலறிவிப்பும் அளிக்கவில்லை. அதன்பின்னர் மனுதாரரின் தகப்பனார் முத்து மற்றும் மனுதாரரின் சகோதரர் நல்லப்பன் ஆகியோர்கள் கூட்டு சேர்ந்து கூட்டு குடும்ப பாகப்பிரிவினையின்படி பெற்ற சொத்துக்களை கடந்த 08.02.2007 ஆம்தேதியில் Software Techno Development Trust க்கு ஒரு பதிவு செய்யப்பட்ட கிரையம் மூலம் விற்பனை செய்துவிட்டார்கள்.

(ii) மனுதாரர் பாகப்பிரிவினை கோரி 10.01.2012ஆம் தேதியில் சட்ட அறிவிப்பு அனுப்பியதற்கு, பதிலளித்த மனுதாரரின் தகப்பனார், வழக்கு சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதையும், அதில் மனுதாரருக்கு 3ல் 1 பங்கு பாத்தியம் உள்ளது என்பதையும் ஒப்புக்கொண்டு, அதை அவரின் இறுதி காலத்திற்கு பிறகு மனுதாரரின் சகோதரருடன் பெற்றுக்கொள்ள கேட்டுக்கொண்டார். அவருடைய தகப்பனார் மற்றும் சகோதரர் ஆகியோர்கள் மீது மனுதாரர் தாக்கல் செய்த பாகப்பிரிவினை அசல் வழக்கு எண்.33/2012 இல் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் மனுதாரரின் தகப்பனார் முத்து மற்றும் சகோதரர் அருணாச்சலம் ஆகியோர்கள் மனுதாரரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். மனுதாரரின் சகோதரின் ஆதிக்கம் மற்றும் பயமுறுத்தலினால் வழக்கு விசாரணையின்போது மனுதாரரின் தகப்பனார் தான் தாக்கல் செய்த எதிர்வழக்குரை மற்றும் பதிலறிவிப்புக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். இதனை கவனத்தில் கொள்ளாமல் 2ம் கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்கள் கடந்த 18.04.2017ஆம் தேதியன்று தவறுதலாக தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை வழங்கிவிட்டார். அந்த கேள்விக்குள்ளான தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண்.703/2017 தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்து வருகிறது. அசல் வழக்கு எண்.33/2012 ஆனது தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு 1ஆம் பிரதிவாதி வழக்கு சொத்துக்களை தன்னுடைய தகப்பனார் முத்துவின் மூலம் விற்பனை செய்ய முயற்சி

செய்தார். ஆகையால் தினதந்தி நாளிதழ் மூலமாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு நிலுவையில் உள்ளதை பொது மக்களுக்கு தெரியப்படுத்தி அதனை யாரும் வாங்கக்கூடாது என்று அறிவுறுத்தியுள்ளார். அதேபோல் மனுதாரர் தனது ஆட்சேபனையை பலமுறை மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அவர்களுக்கு கொடுத்துள்ளார். இதற்கிடையில் மனுதாரரின் சகோதரர் அருணாசலம் மனுதாரரின் தகப்பனார் முத்து எழுதிக்கொடுத்ததுபோல் ஒரு போலியான உயிர் ஆவணத்தை தனது பெயரில் எழுதி வைத்துள்ளார். அந்த உயில் ஆவணம் எழுதிய சில மாதங்களிலேயே அருணாச்சலம் வீட்டிலேயே முத்து இறந்துவிட்டார். முத்துவின் இறப்பை மனுதாரருக்கு தெரியபடுத்தமலேயே நள்ளிரவிலேயே உடலை அருணாச்சலம் எரித்துவிட்டார். இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டும், உடல் எரிக்கப்பட்டு விட்டதால், அந்த புகாரிலிருந்து அருணாச்சலம் வெளியே வந்துவிட்டார்.

(iii) மனுதாரர் பலமுறை தனது ஆட்சேபனையை தெரிவித்தும் மகுடஞ்சாவடி சார்பதிவளார் அவர்கள் 1 முதல் 4 பிரதிவாதிகள் 5 முதல் 8 பிரதிவாதிகளின் பெயரில் ஏற்படுத்திய மோசடியான கிரைய ஆவணத்தை 07.07.2020 ஆம் தேதியில் பதிவு செய்துவிட்டார். உயில் ஆவணத்தில் 4000 சதுரடி வில்லை வீட்டை பற்றி கூறாமல் கிரைய ஆவணத்தில் 4000 சதுர அடிக்கு பதிலாக 45 சதுர மீட்டர் வில்லை வீடு என்று குறிப்பிட்டுள்ளதிலிருந்து அது மனுதாரரின் சங்கதிளை நிரூபணம் செய்யும். சார்பதிவாளர் கல ஆய்வு செய்யாமலும், வீட்டை மதிப்பீடு செய்யாமலும் கிரைய ஆவணத்தை வெளியிட்டுவிட்டார். மேலும், கிரைய ஆவணத்தை பதிவு செய்ய எந்த தடையும் இல்லை என்பதற்கு அசல் வழக்கு எண்.33/2012 இன் தீர்ப்பாணையை தானே தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் 5 முதல் 8 வரையிலான பிரதிவாதிகளை மேல்முறையீட்டு வழக்கில் சேர்த்துள்ளார். அவர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. வில்லங்கத்தை தெரிந்துகொண்ட 5 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் 9 ம் எதிர்மனுதாரருக்கு கடந்த 22.09.2021 ஆம் தேதியன்று நிலத்தை விற்றுவிட்டார்கள். மனுதாரரின் ஆட்சேபனையிருந்தும், சார்பதிவாளர் அவர்கள் அந்த கிரைய ஆவணத்தை பதிவு செய்துள்ளார். எனவே, மனுதாரர் 9 ஆம் எதிர்மனுதாரர் A. அழகர்சாமி மற்றும் சார்பதிவளார் மகுடஞ்சாவடி அவர்களுக்கு கிரைய ரத்து செய்ய வேண்டி அறிவிப்பினை அனுப்பியுள்ளார். அறிவிப்பின் நகல்கள் மாவட்ட ஆட்சியர் சேலம் அவர்களுக்கும், மாவட்ட பதிவாளர் (மேற்கு) சேலம் அவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பினை பெற்றுக்கொண்ட 9 ஆம் எதிர்மனுதாரர் வழக்கு சொத்துக்களை மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்ய முயற்சி செய்கிறார். எனவே, இடைக்கால தடையாணை வழங்குவது அவசியமாகிறது. ஆகையால், இந்த மனுவை அனுமதிக்க வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்/9ம் பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகததால் அவருக்கு எதிராக கடந்த 05.12.2022ம் தேதி ஒருதலைபட்ச உத்தரவானது (Exparte) பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4) மனு பிரச்சனையை தீர்வு காணும் பொருட்டு மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**5) தீர்வு:-**

மனுதாரர் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் இந்த மனுவை உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1 & 2 மற்றும் பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கில் இறுதி தீர்ப்பு வரும் வரை வழக்கு சொத்துக்களை 9ம் பிரதிவாதி எவ்வித வில்லங்க பாராதீனமும் செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்.

6) ஆவணங்களை பரிசீலனை செய்ததிலிருந்து அசல் வழக்கு எண்.75/2022 ஆனது மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகம் ஆவண எண்.2998/2020ன்படியான 07.07.2020ஆம் தேதியிட்ட கிரைய ஆவணம் மற்றும் மேற்படி சார்பதிவாளர் அலுவலகம் ஆவண எண்.5227/2021இன்படியான 22.09.2021ஆம் தேதியிட்ட கிரைய ஆவணங்களை செல்லாது மற்றும் இல்லாநிலையது என்று விளம்புகை செய்யக்கோரியும், எதிர்மனுதாரர்/9ம் பிரதிவாதி மேல்முறையீட்டு வழக்கு எண்.703/2017 ஆனது முடியும் வரை வழக்கு சொத்தை பொறுத்து எந்த கிரைய ஆவணமும் பதிவு செய்யக்கூடாது என்றும், சார்பதிவாளர் மகுடஞ்சாவடி அவர்கள் மேல்முறையீட்டு வழக்கு எண்.703/2017 ஆனது முடியும் வரை வழக்கு சொத்தை பொறுத்து எந்த கிரைய ஆவணமும் பதிவு செய்யக்கூடாது என்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

7) மனுதாரர் தரப்பில் மேல்முறையீட்டு வழக்கு எண்.703/2017இன் வழக்குரை நகல் ம.சா.ஆ.1 ஆகவும், மேல்முறையீட்டு வழக்கு எண்.703/2017இன் நிலுவை குறித்த குறிப்புகள் ம.சா.ஆ.2 ஆகவும், 07.07.2020ஆம் தேதியிட்ட கிரைய ஆவணம் இணையவழி நகல் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.3 ஆகவும், 22.09.2021ஆம்

தேதியிட்ட கிரைய ஆவணத்தின் இணையவழி நகல் ம.சா.ஆ.4 ஆகவும், 21.07.2020 ஆம் தேதியிட்ட சட்ட அறிவிப்பு நகல் ம.சா.ஆ.5 ஆகவும், 21.07.2020 ஆம் தேதியிட்ட சட்ட அறிவிப்புக்கு அளிக்கப்பட்ட பதிலறிவிப்பு நகல் ம.சா.ஆ.6 ஆகவும், 26.02.2022 ஆம் தேதியிட்ட சட்ட அறிவிப்பு நகல் ம.சா.ஆ.7 ஆகவும், அஞ்சலக ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.8 ஆகவும், மேல்முறையீட்டு வழக்கு எண்.703/2017 இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள உரிமையியல் பலவகை மனு எண்.9688/2020 இன் நகல் ம.சா.ஆ.9 ஆவணமாகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8) மனுதாரர் தரப்பில் வழக்கு சொத்தில் 3 இல் 1 பங்கு பாக உரிமை கோரி அசல் வழக்கு எண்.33/2012 என்ற வழக்கை மாண்புமிகு இரண்டாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம் முன் தாக்கல் செய்து அசல் வழக்கில் 18.04.2017 ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின்படி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீட்டு வழக்கு எண்.703/2017 ஆனது தாக்கல் செய்யப்பட்டு, அது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்று கூறி மேல்முறையீட்டு வழக்கு எண்.703/2017 இன் வழக்குரை நகல் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9) இந்நிலையில் மனுதாரர் தரப்பில் முன்வைக்கப்பட்ட சங்கதிகள் மற்றும் வாதங்களை நன்கு பரிசீலனை செய்கையில் மனுதாரர் அசல் வழக்கில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்தையையே இடைநிலை மனுவிலும் கோரியுள்ளார். மனுதாரர் அசல் வழக்கில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரியுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டவையாகவும், ஒத்த இயல்பு உடையனவாகவும் உள்ளது. எனவே, மனுதாரர்கள் எழுப்பியுள்ள பிரச்சனையும், அதன் தகுதிபாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்ப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணையை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது.

10) மேலும், இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களின் வாதங்களையும் கருத்தில் கொண்டு, இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரதான பிரச்சனையானது வழக்கு சொத்தின் சட்டப்படியான சுவாதீன அனுபவத்தில் மனுதாரர் உள்ளரா ? என்பதும், மேற்படி மனுதாரரின் சட்டப்படியான சுவாதீன அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்தரா ? என்பதே ஆகும்.

11) மேற்படி சங்கதிகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து தரப்பினர்கள் முன்வைக்கும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவற்றை தீர்மானிக்க முடியும். மேலும், இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையானது சங்கதிகள் தொடர்பான எழுவினாவாக உள்ளது என தெரிய வருகிறது. எனவே, வழக்கு விசாரணையின்போது தரப்பினர்களால் முன்வைக்கப்படும் வாய்மொழி ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

12) மாண்புமிகு உச்சநீதிமன்றம் " Anand Prasad Agarwalla Vs Tarkeshwar Prasad and Others, reported in 2001 5) SCC 568" என்ற வழக்கில் " It may not be appropriate for any court to hold mini trial at the stage of grant of temporary injunction." என்ற சட்ட நிலைபாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரரால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற வழக்காக இரு தரப்பு வாதங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் குறிப்பிட்டுள்ளபடி இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணையை நடத்த அவசியம் இல்லை என்று முடிவு செய்கிறது.

13) முடிவாக, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, நகல் எடுக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 27.02.2024 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்) ஆர். ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.

**பிற்சேர்க்கை:-**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்** : இல்லை

<u>**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**</u> :

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | --- | மேல்முறையீட்டு மனு எண்.703/2017 இன் வழக்குரை - நகல் |
| ம.சா.ஆ.2 | --- | மேல்முறையீட்டு மனு எண்.703/2017 வழக்கு குறித்த குறிப்புகள் |
| ம.சா.ஆ.3 | 07.07.2020 | கிரைய ஆவணம் - இணையவழி நகல் |
| ம.சா.ஆ.4 | 22.09.2021 | கிரைய ஆவணம் - இணையவழி நகல் |
| ம.சா.ஆ.5 | 21.07.2020 | சட்ட அறிவிப்பு - நகல் |
| ம.சா.ஆ.6 | 20.08.2020 | சட்ட அறிவிப்புக்கு அளிக்கப்பட்ட பதிலறிவிப்பு - நகல் |
| ம.சா.ஆ.7 | 26.02.2022 | சட்ட அறிவிப்பு - நகல் |
| ம.சா.ஆ.8 | --- | அஞ்சலக ஒப்புதல் அட்டை |
| ம.சா.ஆ.9 | --- | மேல்முறையீட்டு வழக்கு எண்.703/2017 இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள உரிமையியல் பலவகை மனு எண்.9688/2020 – நகல் |

<u>**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்**</u>: இல்லை

<u>**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-**</u> இல்லை

(ஒப்பம்) ஆர். ராதாகிருஷ்ணன்,
மா.உ.நீ.,
சங்ககிரி.